**தலைப்பு 10 – இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துக்களும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 26 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 09 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, இந்நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவின் நிதி நிலைமையினையும் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவிடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமத்தின் கீழ் எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் காலத்திற்கு காலம் மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல்,

வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்கியதாகவும்,

(ஆ) கடந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும் .

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) ஆதனப் பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனப் பொறிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கிடும் போது கீழுள்ள குறைபாடுகள் வெளியாகின.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| ரூபா 28,975,000 பெறுமதி வாய்ந்த 05 வாகனங்களின் உரிமையை கையேற்றுக் கொள்ளாது 2021 திசெம்பர் 31 ஆந் திகதி மூலதனத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. | இவ் 05 மோட்டார் வாகனங்களின் உரிமையினை கையேற்பது தொடர்பான பதிவு அத்தாட்சிப் பத்திரங்கள் மோட்டார் வாகனத் திணைக்களத்தினால் 2022.04.25 திகதி நிறுவனத்திடம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | பதியப்படும் தினம் உரிமையினை கையேற்கப்பட்ட வாகனங்கள் மாத்திரம் மூலதனமாக்கப்பட வேண்டும். |

## (ஆ) காசுப்பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| வேறு செலவினத் தலைப்புக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 332,640 க்கான செலவினத்தினை காசுப்பாய்ச்சல் கூற்றில் வேறு செலவின தலைப்புக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினத்தின் கீழ் காட்டப்படாததுடன் தனிநபர் சம்பள மற்றும் நடவடிக்கை செலவினங்களின் கீழ் குறிக்கப்பட்டிருந்தன. | இதனை காசுப்பாய்ச்சல் கூற்றில் ஏனைய செலவின தலைப்புக்களில் வரவு வைக்கப்பட்டுள்ளதுடன் இது வேறுபட்ட வருமான தலைப்புக்களின் மூலமான வரவாகும். | வேறுபட்ட செலவின தலைப்புக்களுக் காக மேற்கொள்ளப் பட்ட செலவுகள் காசு பாய்ச்சல் கூற்றில் தனியாக குறிக்கப்படல் வேண்டும். |

## (இ) ஆவணங்கள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட வாகன விபத்துக்களுக்கான பட்டியல் முறையாக இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படாது இருந்தது. | வாகன விபத்துக்களுக்கான பட்டியல் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுவதுடன் தற்பொழுது முடிக்கப்படாத பங்கு நிதிப்பிரமாணம் 104 விசாரிப்பு அறிக்கை கிடைக்கப் பெற்ற பின்னர் முடிக்கப்படும். | வாகன விபத்துக்களுக்கான பட்டியல்களை உரிய முறையில் இற்றைப்படுத்தப் படல் வேண்டும். |

**(ஈ) கணக்காய்வு சான்றுகள் இல்லாமை**

பின்வரும் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக கணக்காய்வு சான்றுகள் முன்வைக்கப்படவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| ரூபா 41,015 பெறுமதி வாய்ந்த 05 வாகன விபத்து சம்பவங்கள் தொடர்பாக நட்டம் மற்றும் இழப்புக்கள் சம்பந்தப்பட்ட தகவல்கள் கணக்காய்வுக்கு முன்வைக்கப்படவில்லை. | வாகனங்களின் இலக்கங்கள் குறிப்பிடப்பட்டிருக்கா மையினால் தெளவுபடுத்தலினை முன்வைப்பது கடினமாகும். | வாகன விபத்துக்கான பட்டியலில் பெறுமதியினையும் பதியப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 இலஞ்ச சுற்றிவளைப்புக்களில் இலஞ்சமாக பயன்படுத்துவதற்கான முற்பணக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 998,330 க்கான முற்பணம் சம்பந்தமான வழக்குத் தீர்ப்பு கூறப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட திகதியான 2022 ஏப்ரல் 05 ஆந் திகதிக்கு ஒரு வருடத்திற்கு மேல் கழிந்திருந்த போதிலும் அம்முற்பணத்தினை சரப்பரிடம் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை | அம்முற்பணத்தினை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | வழக்கு சம்பந்தப்பட்ட விடயங்கள் மற்றும் மேன்முறையீடு முடிந்ததன் பின்னர் முற்பணத்தினை சரி செய்வதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2.2 சட்டம், ஒழுங்கு மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வு பரீட்சிப்புக்களில் அவதானிக்கப்பட்ட சட்டம், ஒழுங்கு மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்கா சந்தர்ப்பங்கள் ஒப்பீடு செய்யப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16.2 பிரிவு | | மீளாய்வு ஆண்டிற்கான தயாரிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் சட்டவாக்கம் நிதிக் கூற்றுடன் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வறிக்கையினை 51 நாட்கள் தாமதப்படுத்தி | எதிர்வரும் ஆண்டுகளில் அதன் சட்டவாக்கத்தினை முன்வைக்கும் போது உங்களிடம் அனுப்புவதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படும். | செயலாற்றல் அறிக்கையின் சட்ட வாக்கத்தினை நிதிக்கூற்றுடன் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 371(2) மற்றும் 371(5) | 44,000 | 06 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக் கொடுக்கப்பட்ட சம்பந்தப்பட்ட காரியத்திற்கான முழுத்தொகை ரூபா 44,000 ஆன உப கட்டுநிதியினை தாமதித்து செலுத்தப் பட்டிருந்தது. | விசாரணை அதிகாரிகளின் வழக்குக் காரியங்கள் மற்றும் விசாரணைகளுக்கான உத்தியோகப் பொறுப்புக்கள் காரணமாக அவர்களின் வேலைப் பழுவினால் முற்பணம் செலுத்துவது தாமதப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |
| (இ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய இலக்கம் 05/2016 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை | | | | |
| | (i) 3.1.5 பந்தி | | ஒவ்வொரு நிதியாண்டிலும் பெப்ரவரி 26 ஆந் திகதிக்கு முன்னதாக பொது 47 | கொவிட் தொற்று நிலைமை காரணமாக பொருட் கணிப்பு செயற்பாடுகளை | சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அறிக்கையின் படி அழிக்கப்பட வேண்டிய புதுப்பிக்கப்பட வேண்டிய, விற்கப்பட வேண்டிய மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு கையளிக்கக் கூடிய பொருட்கள் தொடர்பாக தகுந்த முறையில் நடவடிக்கை மேற்கொண்டு மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் சென்ற ஆண்டிற்கான பொருட் கணிப்பு அறிக்கையினை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டி இருந்த போதிலும் அவ்வாறு செய்யாது மீளாய்வு ஆண்டு மார்ச் 30 ஆந் திகதி பொருட் கணிப்பு அறிக்கையை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருந்தது. | குறித்த தினத்தில் செய்து முடிப்பதற்கு இயலாது போயிற்று. | |
| (ii) | 3.1.6 பந்தி | 2020 வருடத்தின் வழக்குகள் தொடர்புடைய பொருட் கணிப்பு அறிக்கையினை 04 மாதங்கள் தாமதப் படுத்தப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப் பட்டிருந்தது. | கொவிட் தொற்று நிலைமை காரணமாக வழக்குகள் தொடர்பான பொருட் கணிப்பு செயற்பாடுகள் குறித்த தினத்தில் செய்து முடிப்பதற்கு முடியாது போயிற்று. | சுற்றறிக்கை பிரகாரம் மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் சென்ற ஆண்டிற்குரிய பொருட் கணிப:பு அறிக்கையை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| ஆணைக்குழுவினால் தொடரப்பட்ட வழக்குகளில் 2019 மற்றும் 2020 வருடங்களில் 10 வழக்குகள் பற்பல காரணங்களினால் வாபஸ் பெறப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் 39 வழக்குகள் வாபஸ் பெறப்பட்டிருந்தன. அவ் வழக்குகள் 39 இல், 2015 வருடத்திற்கு முன்னர் தொடரப்பட்ட 5 வழக்குகள் இருந்ததுடன் 2019 வருடம் தொடரப்பட்ட 02 வழக்குகள் இருந்தன. மீதி 32 வழக்குகள், 2015 வருடம் முதற்கொண்டு 2018 ஆம் ஆண்டு வரையில் தொடரப்பட்ட வழக்குகள் ஆகும். | இவ்வழக்குகள் வாபஸ் பெற்றமை வழக்குகளினுள் காணப்பட்ட தொழில்நுட்ப கோளாறுகளினை நீக்கப்பட்டு மீண்டும் வழக்குகளை தொடருவதற்காகும். | வாபஸ் பெறப்பட்டுள்ள வழக்குகளில் காணப்பட்ட தொழில்நுட்ப கோளாறுகள் நீக்கப்பட்டு மீண்டும் வழக்குகள் தொடரப்பட வேண்டும். |

### 3.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) பாதுகாப்பு மதிலுக்கான விநியோக முறைமையினை தயார் செய்தல் | | |
| (i) ரூபா 1,903,348 விற்கு கட்டிட திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த இவ் ஒப்பந்தம் தொடர்பாக எவ்வித உடன்படிக்கையிலும் கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. | இது இரு அரச நிறுவனங்களுக்கு இடையில் பரஸ்பர புரிந்துணர்வுடன் செயற்படுவதனால் உடன்படிக்கை கைச்சாத்திடல் மேற்கொள்ளப்படவில்லை. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1(ஆ) பந்தியின் படி ரூபா 250,00 விஞ்சும் வேலை ஒப்பந்தத்திற்கான ஏதாயினும் ஒரு ஒப்பந்தத்திற்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கை எழுத்தப்பட்டு கைச்சாத்திடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | இவ் ஒப்பந்தம் தொடர்பாக ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையினை தடுத்து வைப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இக்கொடுப்பனவு தொடர்பாக தடுத்து வைப்பு தொகையினை கட்டிட திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அத்திணைக்களம் அறியத் தந்துள்ளது. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.6(அ) பந்தியின் படி ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படும் கொடுப்பன விலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையினை தடுத்து வைக்கப் படல் வேண்டும். |
| (iii) | இந்த ஒப்பந்தம் தொடர்பாக பெறுகை நடவடிக்கை ஆரம்பத்திலிருந்து முறையான திட்டத்துடன் மேற்கொள்ளப்படா மையினால் இரு சந்தர்ப்பங்களில் விலைமனுக் கோரல், மறுபடியும் கட்டிட திணைக்களம் ஊடாக சம்பந்தப்பட்ட காரியத்தினை மேற்கொள்ளல், பிரதான கம்பங்களில் மின் விளக்குகள் பொருத்துதல் மற்றும் சிறு கம்பங்களுக்காக விலை மனுகோரல் ஆகிய நடவடிக்கைகள் இடைநடுவே மேற்கொள்ளப்பட்டன. | மதிலின் ஆரம்ப திட்டம் சஹ்ராவின் குண்டுத்தாக்குதல் காரணமாக மாற்றியமைக்க நேர்ந்தமை, ஆரம்பத் திட்டங்களிலிருந்த மின் விளக்குகள் சந்தையில் கிடைக்காமை மற்றும் கையிருப்பு ஒதுக்கீடு போதுமானதாக இல்லாது இருந்தமை காரணமாக இடைநடுவே மனுக்கோரல் மேற்கொள்ளப்பட்டது. | முறையாக திட்டம் வகுக்கப்பட்டு கருமங்கள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். |
| (iv) | இப்பெறுகை செயற்பாட்டுக்காக கட்டிட திணைக்களத்திற்கு 2021 திசெம்பர் 16 ஆந் திகதி ரூபா 1,903,348 செலுத்தப்பட்டிருந்ததுடன் அங்கு மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் பெறுமதி நூற்றுக்கு 80 என குறிப்பிடப்பட்டிருந்தது. கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட தினமான 2022 ஏப்ரல் 08 | இதற்கு போதிய அளவிலான ஒதுக்கீடு இல்லாமையினால் இவ்வாண்டில் இவ் வேலையினை செய்து முடிப்பதற்கு முடியாது போயிற்று. | வேலையினை கூடிய விரைவில் செய்து முடிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆந் திகதி வரையிலும் மீதி வேலைகள் முடிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | புதுக் களஞ்சிய அறையொன்றினை தயார்ப்படுத்தல். | | |
| (i) | இவ் ஒப்பந்தத்திற்காக மீளாய்வு ஆண்டில் ரூபா 156,353 செலுத்தப்பட்டிருந்த போதும், அதற்காக கட்டிடத் திணைக்களத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்டு விபரமான பற்றுச்சீட்டு இருக்கவில்லை. | இடைக்கால பற்றுச்சீட்டின் மூலம் ரூபா 156,533 செலுத்தப்பட்டிருந்தது. அது பற்றி வவுச்சரில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான இறுதி மற்றும் விபரமான பற்றுச்சீட்டினை 2022.01.26 திகதி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | பணம் செலுத்துதல்களின் போது விபரமான பற்றுச்சீட்டினை பெறப்பட்டு பரீட்சித்ததன் பின்னர் பணம் வழங்கப்பட வேண்டும். |
| (ii) | ரூபா 614,200 க்கான இவ் ஒப்பந்தம் தொடர்பாக எவ்வித உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. | இது 02 அரச நிறுவனங்களுக்கு இடையில் பரஸ்பர புரிந்துணர்வுடன் செயற்படுவதனால் உடன்படிக்கை கைச்சாத்திடல் மேற்கொள்ளப்படவில்லை. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1(ஆ) பந்தியின் படி ரூபா 250,000 விஞ்சும் வேலை ஒப்பந்தத்தின் பொருட்டு முறையான ஒப்பந்த உடன்படிக்கை எழுதப்பட்டு கைச்சாத்து இடப்பட வேண்டும். |

## 3.3 சொத்துக்களுக்கான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2014 ஆம் வருடம் குத்தகை அடிப்படையின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்டு 05 வாகனங்களின் குத்தகை கால எல்லையினை முடிவடைந்து ஒரு வருட காலம் கழிந்து போன பின்னரும் அவ்வாகனங்கள் கையேற்கப்பட்டு கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை. | இவ் 05 வாகனங்கள் சம்பந்தமாக சகல ஆவணங்களும் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்பு இவ் ஆணைக்குழுவிடம் கையளிப்பதற்கு மோட்டார் வாகன ஆணையாளர் அதிபதி நாயகத்திடம் 2021.01.21 திகதி ஒப்படைக்கப்பட்டுள்ளது. | குத்தகைக் காலம் முடிவடைந்ததும் அவ் வாகனங்களை கையேற்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

### 3.4 நட்டங்களும் இழப்புக்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2017 வருடம் முதல் 2019 வருடம் வரையிலான கால எல்லையினுள் நடந்த ரூபா 274,612 பெறுமதிவாய்ந்த 11 வாகன விபத்துக்கள் தொடர்பாக நட்டங்கள் மற்றும் தள்ளுபடி சம்பந்தமாக 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிதிப்பிரமாண ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்பட்டிருக்கவில்லை. | வாகன விபத்துக்கள் தொடர்பாக அறவிடப்படல் அல்லது அவ்வாறு இல்லாது போயின் தள்ளுபடி மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதிப் பிரமாண ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பட வேண்டும். |
| (ஆ) ஆணைக்குழுவிற்கு சொந்தமான ஒரு வாகனத்திற்கு ஏற்பட்ட ரூபா 8,965 நட்டத்தினை தள்ளுபடி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக கணக்காய்வினைக்கு சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணை மூலம் காட்டப்பட்டுள்ள போதும், நிதிக்கூற்றில் நட்டங்கள் மற்றும் | இவ்வாகனத்தின் நிதிப் பிரமாணம் 104(1) ஆரம்ப விசாரணை அறிக்கை தற்போது கிடைக்கப் பெற்றுள்ளதுடன் அதற்கமைவாக மேற்படி நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்விற்கு சரியான தகவல்கள் முன்வைக்கப்பட வேண்டியதுடன் நிதிப் பிரமாணப் படி செயற்பட வேண்டும். |

### 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2016 மார்ச் 01 ஆந் திகதி பிரதமர் அலுவலகத்தில் நடந்த பொருளாதார முகாமைத்துவ அமைச்சரவை குழுவினால் மலலசேகர மாவத்தையில் | பூமியினை உரிமையினை கையேற்பதற்காக திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளரிடம் வேண்டுகோள் விடுத்த போதிலும் பூமியினை | பூமியின் சட்டபூர்வ உரிமையினை கையேற்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ள இலக்கம் 36/69 சீ கொண்ட பூமியினை இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவிடம் கையளிப்பதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அப்பூமியின் சட்டரீதியான உரிமையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் இயலாது போயிருந்தது. | கையளிப்பதினை எதிர்ப்பதாக நகர அபிவிருத்தி அதிகார சபை அறியத் தந்திருப்பதனால் இச்செயற்பாடு தாமதப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (ஆ) | வழக்குத் தீர்ப்புக்கள் வழங்கப்பட்டு பல வருடங்கள் கழிந்துபோன வழக்குகள் சம்பந்தப்பட்ட வழக்குசார் 05 உருப்படி பொருட்கள் வழக்கு பொருட்சார் அதிகாரியின் பொறுப்பில் இருந்தன. | இந்த வழக்குசார் பொருட்கள் நீதிமன்ற பொறுப்பில் உள்ள படியினால் அவற்றை ஆணைக்குழுவிற்கு கொண்டு வரப்பட்டு பின்னர் நீக்கல் குழுவொன்று நியமிக்கப்பட்டு அதன் மூலம் பெற்றுக் கொடுக்கப்படும் பரிந்துரையின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நீதிமன்ற செயற்பாடுகளின் பின்னர் வழக்குத் தீர்ப்பு கிடைத்ததற்கு பிறகு அல்லது மேன்முறையீடு முடிந்ததன் பிறகு அக் கோவைகளுடன் தொடர்புடையதாக இருக்கும் வழக்கு சார் பொருட்களை வழக்குசார் பொருட்களின் மீதியிலிருந்து தள்ளுபடி செய்யப்படல் வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| ஆணைக்குழுவின் சிவில் பணிக்குழுவின் தகவலின் படி 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான சிரேஷ்ட மட்டத்தில் 32 வெற்றிடங்களும், மூன்றாம் மட்டத்தில் 212 வெற்றிடங்களும், இரண்டாம் மட்ட்தில் 117 வெற்றிடங்களும், | புதுப் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பினை அரசாங்கத்தினால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. அதன்படி இவ் ஆணைக்குழுவிற்கு தேவையான அதிகாரிகளை | வெற்றிடங்கள் நிரப்புவதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். |

மற்றும் முதலாம் மட்டத்தில் 50 வெற்றிடங்களும் இருந்தன. விசாரணை பணிக்குழுவின் தகவலின் படி அப்பணிக்குழுவில் 15 வெற்றிடங்கள் இருந்தன.

பெற்றுத்தரும்படி பொது நிர்வாக அமைச்சிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டள்ள போதிலும் இதுவரையிலும் அதிகாரிகள் பெற்றுத்தரப்படவில்லை.